*கவனிக்க.- 2023.12.22 ஆந் திகதிய 2364 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2365 - 2023 දෙසැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2023.12.29

*2365 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *3094* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *3114* |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, சனவரி மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3091-B 82527-5,441 (2023/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;

III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;

IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;

V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;

VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;

VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;

VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.

2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.

3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.

5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;

7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.

8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.

9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.

10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.

11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.

13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.

14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.

16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.

17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:

(i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;

(iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.

(iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;

(v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;

(vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;

(vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;

(viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;

(ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;

(x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;

(xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;

(xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;

(xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

### சமூக சேவைகள் திணைக்களம்

சைகைமொழி பெயர்ப்பாளர் (தரம் III)

வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III)

விடுதிக் காப்பாளர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தில், 10 சைகை மொழி பெயர்ப்பாளர் பதவிகள், 10 வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் பதவிகள் மற்றும் 05 விடுதிக் காப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களினை, "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 வது மாடி, II ஆவது கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2024.01.25 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணபப் படிவத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சைகைமொழி பெயர்ப்பாளர் (தரம் III)/வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (தரம் III)/விடுதிக் காப்பாளர் (தரம் III) தொடர்பிலான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையத் தளத்தினூடாக மாதிரிப் படிவம் மற்றும் விவரங்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :-

1. **சைகை மொழி பெயர்ப்பாளர்**

1.1. **திறந்த ஆட்சேர்ப்பு** :-

1.1.1. **வயது வரையறை** :-

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.1.2. **கல்வித் தகைமைகள்** :-

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் (02) இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சகல பாடங்களிலும் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து), (பழைய பாடத் திட்டப் பரிந்துரையின் கீழ் மூன்று (03) பாடங்களை ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் போதுமானது.)

1.1.3. **வாழ்க்கைத் தொழில் தகைமைகள்** :-

தேசியக் கல்வி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமா சான்றிதழ் அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமா சான்றிதழ் அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவன மொன்றினூடாக நடாத்தப்படும் ஒரு வருடத்திற்குக் குறையாத சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமா சான்றிதழ்

1.1.4. **அனுபவம்** :-

தொடர்பற்றது

1.1.5. **உடற் தகுதிகள்** :-

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் வேண்டிய எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.1.6. **பிற தகைமைகள்** :-

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்
ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று எல்லாவகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.1.7. **ஆட்சேர்ப்பு முறைமை** :-

எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

1.1.7.1. *எழுத்து மூலப் பரீட்சை* :-

| *விடயங்கள்* | *நேரம்* | *ஆகக்கூடிய மதிப்பெண்கள்* | *தேர்ச்சி மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித்திறன் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

1.1.7.2. வாழ்க்கைத் தொழில் பரீட்சை :- சைகை மொழி நடைமுறை அறிவினைப் பரீட்சித்தல்

| *விடயங்கள்* | *நேரம்* | *ஆகக்கூடிய மதிப்பெண்கள்* | *தேர்ச்சி மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| சைகை மொழி நடைமுறை அறிவினைப் பரீட்சித்தல் | 01 மணித்தியாலம் | 100 | 40 |

1.1.8. **பொது நேர்முகப் பரீட்சை** :- பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிப்பதற்காக சான்றிதழ்களினைப் பரீட்சித்தல் (மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது)

1.1.9. **சம்பள அளவுத் திட்டம்** :-

பொ.நி.சு. 03/2016 இன் பிரகாரம் MN – 02- 2016

சம்பள அளவு ரூபா 28,940.00 -10×300 -11 × 350 -10 × 560 - 10 × 660- ரூபா 47,990.00 ஆகும்.

1.1.10. **குறிப்பு** :-

எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சையினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து இருமடங்கினர் வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அதே நேரத்தில் பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். பொது நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை இரண்டிலும் மொத்த மதிப்பெண்களின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.1.11. **சேவை நிபந்தனைகள்** :-

இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன்,

விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.2. **வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு** :-

1.2.1. **கல்வித் தகைமைகள்** :- சிங்களம் / தமிழ் /ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

1.2.2. **வாழ்க்கைத் தொழில் தகைமைகள்** :-

தேசியக் கல்வி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமா சான்றிதழ் அல்லது

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக நடாத்தப்படும் ஒரு வருட சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமா சான்றிதழ் அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினூடாக நடாத்தப்படும் ஒரு வருடத்திற்குக் குறையாத சைகை மொழி பெயர்ப்பாளர் டிப்ளோமா சான்றிதழ்

1.2.3. **அனுபவம்** :- சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியாளர் அல்லது விடுதிக் காப்பாளர் பதவியொன்றில் 05 வருடத்திற்குக் குறையாது செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலப்பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.

1.2.4. **உடற் தகுதிகள்** :-

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.2.5. **பிற தகைமைகள்** :-

i. நியமனம் உறுதிப்படுத்தப்படுதல்
ii. தகைமைகள் பூர்த்தி செய்யப்படும் தினத்திற்கு முந்தைய ஐந்து (05) வருட காலப்பகுதியினுள் திருப்திகரமான சேவைக்காலப் பகுதியொன்றினைப் பூர்த்தி செய்திருத்தல்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று எல்லாவகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.2.6. **வயது** :- தொடர்பற்றது.

1.2.7. **ஆட்சேர்ப்பு முறைமை** :- எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சையினூடாக ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

1.2.7.1. எழுத்து மூலப் பரீட்சை :-

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழித்திறன் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

1.2.7.2. வாழ்க்கைத் தொழில் பரீட்சை :-

| விடயங்கள் | நேரம் | ஆகக்கூடிய மதிப்பெண்கள் | தேர்ச்சி மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| சைகை மொழி நடைமுறை அறிவினைப் பரீட்சித்தல் | 01 மணித்தியாலம் | 100 | 40 |

1.2.8. **பொது நேர்முகப் பரீட்சை** :- பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிப்பதற்காக சான்றிதழ்களினைப் பரீட்சித்தல் (மதிப்பெண்கள் வழங்கப்படமாட்டாது)

1.2.9. **குறிப்பு** :-

எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சையினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து இருமடங்கினர் வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அதே நேரத்தில் பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். பொது நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை இரண்டிலும் மொத்த மதிப்பெண்களின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.2.10. **சேவை நிபந்தனைகள்** :-

இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. **வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (உணவு, தொழில்நுட்பம், கணினி, கைவினைக் கலை, குழாய் பொருத்தும் கலை, கையடக்கத் தொலைபேசி பழுதுபார்ப்பு, விற்பனை உதவியாளர், Graphic Designing, பராமரிப்புச் சேவை)**

2.1. **வயது வரையறை** :-

விண்ணப்பங்கள் கையேற்கப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் மற்றும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.2. **கல்வித் தகைமைகள்** :-

(அ) வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (உணவு, தொழில் நுட்பம்) பதவிக்கான கல்வித் தகைமைகள்

சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

(அ) வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் (கணினி, கைவினைக் கலை, குழாய் பொருத்தும் கலை, கையடக்கத் தொலைபேசி பழுதுபார்ப்பு, விற்பனை உதவியாளர், Graphic Designing, பராமரிப்புச் சேவை) பதவிகளுக்கான கல்வித் தகைமைகள்.

(i) சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் மற்றும்

(ii) கல்விப் பொது தராதர (உயர்தர) பரீட்சையில் வேண்டிய பாடவிதானத்தில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) தேர்ச்சி பெற்றிருத்தல், மூன்றாம் நிலைக் கல்வியினைத் தொடர்வதற்குத் தேவையான மட்டத்தினைப் பெற்றிருத்தல்.

2.3. **வாழ்க்கைத் தொழில் தகைமைகள்** :-

உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ்

அல்லது

சிறு கைத்தொழில் திணைக்களத்தில் அல்லது ஆடைக் கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழ்

அல்லது

சமூக சேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அதனுடன் இணைந்த நிறுவனங்களினூடாக நடாத்தப்பட்ட இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடப் பாடநெறிச் சான்றிதழ்

அல்லது

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அதனுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய வாழ்க்கைத் தொழில் தொடர்பிலான இரண்டு வருடங்கள் அல்லது அதனிலும் கூடிய வருடச் சான்றிதழினைப் பெற்றிருத்தல்

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வாழ்க்கைத் தொழில் திறன் (NVQ) ஐந்தாவது (05) மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்பப் பாடநெறி அல்லது அதற்குச் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியொன்றினை வெற்றிகரமாக முன்னெடுத்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

2.4. **அனுபவம்** :-

தொடர்பற்றது

2.5. **உடற் தகுதிகள்** :-

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் வேண்டிய எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

2.6. **பிற தகைமைகள்** :-

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.
ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பில் 1.1 தொடக்கம் 1.6 வரையான சகல தகைமைகளினையும், அத்தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் தினத்தன்று எவ்வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2.7. **ஆட்சேர்ப்பு முறைமை** :-

எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் பரீட்சை பெறுபேற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்துமூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களில் அதிகூடிய மதிப்பெண்களினைப் பெற்ற திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இருமடங்கினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சாதாரண நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பெற்றவர்கள் மாத்திரமே வாழ்க்கைத் தொழில் பரீட்சைக்கு முன்வைக்கப்படுவர். வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள், அவர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளினதும், வாழ்க்கைத் தொழில் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளினதும் மொத்தக் கூட்டுத் தொகையின் பிரகாரம் திறன் ஒழுங்கு முறையில் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பயிற்சிப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். அத்தொகுதியினர் 03 மாதங்கள் கற்பித்தல் முறைமை தொடர்பிலான பயிற்சிப் பாடநெறியொன்றினை முன்னெடுத்து வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

2.7.1. *எழுத்து மூலப் பரீட்சை* :-

| *விடயங்கள்* | *நேரம்* | *ஆகக்கூடிய மதிப்பெண்கள்* | *தேர்ச்சி மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| உளச்சார்பு (நுண்ணறிவு) பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| கிரகித்தல் | 02 மணித்தியாலம் | 100 | 40% |

2.8. **சம்பள அளவுத் திட்டம்** :-

பொ.நி.சு. 03/2016 இன் பிரகாரம் MT – 01 - 2016
சம்பள அளவு ரூபா 29,840.00 -10×300 -11 × 350 -10 × 560 - 10 × 660- ரூபா 48,890.00 ஆகும்.

2.9. **சேவை நிபந்தனைகள்** :-

இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிரூபங்களின் பிரகாரம், ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.10. **குறிப்பு** :-

- சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் நிறுவனமொன்றினூடாக எழுத்து மூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.
- மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் கட்டாய சேவையினையாற்றியதன் பின்னரே வருடாந்த இடமாற்றத்தினைக் கோருவதற்குத் தகைமையினைப் பெறுவர்.

3. **விடுதிக் காப்பாளர்**

3.1. **வயது வரையறை** :-

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.2. **கல்வித் தகைமைகள்**:-

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆகக் குறைந்த வகையில் ஒரு பாடத்திலாவது (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்திபெற்றிருத்தல்.

3.3. **வாழ்க்கைத் தொழில் தகைமைகள்**:-

அரசின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து சிறுவர் விருத்தி தொடர்பில் அல்லது சமூகப் பணி தொடர்பில் அல்லது விடுதி முகாமை தொடர்பில் மூன்று மாதங்களுக்கும் குறையாத பாடநெறியொன்றினைத் தொடர்ந்து சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

3.4. **அனுபவம்** :-

தொடர்பற்றது.

3.5. **உடற் தகுதிகள்** :-

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் வேண்டிய எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

3.6. **பிற தகைமைகள்** :-

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.
ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பிலான 2.1 தொடக்கம் 2.6 வரையிலான சகல தகைமை களினையும், அத்தகைமைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் தினத்தன்று எவ்வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3.7. **ஆட்சேர்ப்புத் திட்டம்** :-

எழுத்து மூலப் பரீட்சையில் இரண்டு வினாத்தாள்களிலும் தேர்ச்சி பெற்று, அதிகபட்ச மதிப்பெண்களினைப் பெறும் தகைமைகளினைப் பெறும் விண்ணப்பதாரர்களினுள், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

3.7.1 *எழுத்துமூலப் பரீட்சை* :-

I. நுண்ணறிவுப் பரீட்சை - நேரம் 01 மணி, மொத்த மதிப்பெண்கள் 100, தேர்ச்சி மதிப்பெண்கள் 40%

II. மொழித்திறன் - நேரம் 01 மணி, மொத்த மதிப்பெண்கள் 100, தேர்ச்சி மதிப்பெண்கள் 40%

3.8. **சம்பள அளவுத் திட்டம்**:-

பொ.நி.சு. 03/2016 இன் பிரகாரம் MN 01 -2016
சம்பள அளவு ரூபா 27,140.00- 10×300-11×350-10×495-10×660- ரூபா 45,540.00 ஆகும்.

3.9. **சேவை நிபந்தனைகள்** :

இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபங்களின் பிரகாரம் ஐந்து வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3.10. **குறிப்பு**

- சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் நிறுவனமொன்றினூடாக எழுத்துமூலப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

- மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் கட்டாயமாக கடமையாற்றியதன் பின்னரே வருடாந்த இடமாற்றத்தினைக் கோருவதற்கு தகைமையினைப் பெறுவர்.

டபிள்யூ. ஜி. டி. கருணாரத்ன,
சமூக சேவைகள் பணிப்பாளர் (பணி நிறைவேற்றம்).

சமூக சேவைகள் திணைக்களம்,
2 ஆவது மாடி, II ஆவது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல,
2023.12.18.

.................................................................. **பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

மொழி | |

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :.................................................................................................................................

02. முதலெழுத்துக்களால் அறியப்படும் பெயர்கள் :.........................................................................................................

03. முகவரி : .................................................................................................................................................

04. தொலைபேசி இலக்கம் :...............................................................................................................................

05. தேசிய ஆளடையாள அட்டை இல. : ..............................................................................................................

06. பிறந்த திகதி :.................................................................................

07. விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :
வருடங்கள் :........ மாதங்கள் : ........... நாட்கள் :....................

08. திருமண நிலை :..............................................................................................................

09. பால் (ஆண்/பெண்) :..............................................................................................................

10. கல்வித் தகைமைகள்:

I. க.பொ.த. (சாதாரண தரம்) :

ஆண்டு :.................... பரீட்சைச் சுட்டெண் :....................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| கணிதம் | | | |
| சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் | | | |
| | | | |
| | | | |
| | | | |

II க.பொ.த. (உயர்தரம்)

ஆண்டு :.................... பரீட்சைச் சுட்டெண்:....................

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. வாழ்க்கைத் தொழில் மற்றும் பிற தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறியின் காலப்பகுதி |
|---|---|---|
| | | |
| | | |

12. அனுபவம் :-

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

..............................................................................................

இவ் விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையும் என்று சான்றுபகர்கின்றேன்.

..........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

12-650

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /(கண்டிய/பொது) பதிவாளர் பதவி – அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, சனவரி மாதம் 29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | மிகிந்தலை | மான்கடவல பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் நுவரகம்பலாத்த பிரிவின் விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |
| அநுராதபுரம் | கெக்கிராவ | களாகம் கோறளை தெற்கு பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி களாகம்பலாத்த பிரிவின் விவாக (கண்டி/ பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |

12-733

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழி மூலம் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவாளராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரி 30 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வயதாகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, சனவரி மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, திசெம்பர் 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | தம்பலகாமம் | மொல்லிப்பொத்தானை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிகப் பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை. |

12-734

---

## இலங்கை கடற்படை பதவி வெற்றிடங்கள் - நிரந்தர/தொண்டர் கடற்படை

### நேரடி நுழைவு அலுவலர்கள்(ஆண்/பெண்) - 2023

1. இலங்கை கடற்படையில் (நிரந்தர/ தொண்டர் கடற்படை) ஆண்/ பெண் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. கீழ்க் காணும் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த ஆண்/ பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ. நிறைவேற்றுத்துறை (நிரந்தர)
ஆ. கடல்சார் பொறியியல் துறை
இ. வழங்கல் பிரிவு
ஈ. மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பிரிவு
உ. மருத்துவப் பிரிவு (நிர்வாக அதிகாரி சுகாதாரம்)
ஊ. பல் மருத்துவப் பிரிவு
எ. தகவல் தொழில்நுட்பப் பிரிவு
ஏ. நிறைவேற்றுத்துறை (தொண்டர்)
ஐ. விவசாயப் போதனாசிரியர் பிரிவு (தொண்டர்)
ஒ. ஆங்கில போதனாசிரியர் பிரிவு (தொண்டர்)
ஓ. கணக்கீட்டுப் பிரிவு (தொண்டர்)

3. **அடிப்படைக் கல்வித் தகைமைகள்:**

அ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் தாய்மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் (C) மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ. இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் தாய்மொழி பாடத்தில் திறமைச் சித்தியுடன் (C) கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆங்கில பாடத்தில் டிப்ளோமா படித்திருத்தல் வேண்டும்.

4. **உயர்கல்வி மற்றும் தொழிற்தகைமைகள்:**

அ. **நிறைவேற்று உத்தியோகத்தர் (நிரந்தர கடற்படை பிரிவு)**

பதவிநிலை - பதில் லெப்டினன்ட் (ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மற்றும்)

தகைமைகள் - இலங்கை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றிலிருந்து அறிவியல் பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஆ. **கடல்சார் பொறியியல் துறை - (நிரந்தரம்)**

பதவிநிலை - லெப்டினன்ட்

தகைமைகள் - க. பொ. த. (உ./த.) பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்ட பாடத்தில் திறமைச் சித்தியுடன் மற்றும் மூன்று பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் அல்லது வெளிநாட்டு அங்கீகரிக்கப்பட்ட கடல்/இயந்திர பொறியியலில் நான்கு வருட பட்டப்படிப்பு.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

இ. **வழங்கல் பிரிவு - (நிரந்தர கடற்படை பிரிவு)**

பதவிநிலை - பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - இலங்கை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வணிக மேலாண்மை, நிதி மேலாண்மை, வணிகக் கணக்கியல், பொருளாதாரம், வணிக நிர்வாகம், மதிப்பீடு ஆகியவற்றில் சிறப்புப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஈ. **பல்மருத்துவ உத்தியோகத்தர் (நிரந்தர)**

1. **பல்மருத்துவ மாணவர்**

(அ) **கடற்படை கீழ்நிலை உத்தியோகத்தர் (ஆண்/பெண்)**

தகைமைகள் - பல் மருத்துவ பீடத்தில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் அரையாண்டுகளை (Semester) பூர்த்திசெய்திருத்தல் அல்லது 1 ஆவது பற்சத்திர சிகிச்சை இளமாணிப் பரீட்சையை (BDS) வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தலுடன் பற்சத்திர சிகிச்சை இளமாணிக் கற்கைநெறியை 3 ஆவது வருடத்தில் கற்றல்.

வயது - 28 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

(ஆ) **வேலை பார்க்கும் பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

தகைமைகள் - பல் மருத்துவ பீடத்தில் 5 ஆம் மற்றும் 6 ஆம் அரையாண்டுகளை (Semester) பூர்த்திசெய்திருத்தல் அல்லது 1 ஆவது பற்சத்திர சிகிச்சை இளமாணிப் பரீட்சையை (BDS) வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தலுடன் பற்சத்திர சிகிச்சை இளமாணிக் கற்கைநெறியை 4 ஆவது வருடத்தில் கற்றல்.

வயது - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

(இ) **பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)**

தகைமைகள் - பல் மருத்துவ பீடத்தில் 7 ஆம் மற்றும் 7 ஆம் அரையாண்டுகளை (Semester) பூர்த்தி செய்திருத்தல் அல்லது பற்சத்திர சிகிச்சை இளமாணி கற்கைநெறியின் இறுதிப் பரீட்சையின் (BDS) பகுதி 1 ஐ வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் மற்றும் பற்சத்திர சிகிச்சை இளமாணிக் கற்கைநெறியை இறுதி வருடத்தில் கற்ற வண்ணம் இருத்தல்.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**2. பல் மருத்துவ அதிகாரி**

(அ) **மருத்துவ லெப்டினன்ட் (பல்)**

தகைமைகள் - இலங்கை மருத்துவ சபையில் (SLMC) நிரந்தர பதிவுடன்கூடிய பற்சத்திர சிகிச்சை இளமாணிப் பட்டம் (BDS) அல்லது அதற்குச் சமமான தகைமை.

வயது - 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**உ. மின்னியல் உத்தியோகத்தர் (நிரந்தர)**

(1) துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு/இயந்திர மின்னணுவியல் துறைகளில் நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட பொறியியல் பட்டம்.

வயது - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

(2) லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து மின்னியல்/இலத்திரனியல்/தொலைத்தொடர்பு/இயந்திர மின்னணுவியல் துறைகளில் நான்கு வருட பொறியியல் பட்டத்துடன் இலங்கைப் பொறியியல் பேரவையில் (ECSL) இணைப் பொறியியலாளராக பதிவுசெய்திருத்தல்.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**ஊ. மருத்துவ அதிகாரி பிரிவு - நிர்வாக அதிகாரி சுகாதாரம் (நிரந்தர கடற்படை பிரிவு)**

(1) வேலை பார்க்கும் பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து செவிலியம் (நர்சிங்) அல்லது துணை மருத்துவம் சம்பந்தமாக பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

(2) பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து செவிலியம் (நர்சிங்) அல்லது துணை மருத்துவம் சம்பந்தமாக பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் மருத்துவரை அல்லது மருத்துவ துறையில் குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவம்.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஏ. **தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (நிரந்தர)**

(1) வேலை பார்க்கும் பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட Red hat தகுதி, Sun Solaris சான்றிதழ் வைத்திருப்பவராக அல்லது சான்றிதழ் தாரழ Ethical Hacker ஆக இருத்தல் வேண்டும்.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

(2) பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து/ நிறுவனத்தில் இருந்து தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் பற்றிய பொறியியல் பற்றிய 03 வருட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமனான தகுதியைப் பெற்றிருத்தல்.

வயது - 32 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஏ. **நிறைவேற்று உத்தியோகத்தர் (தொண்டர்)**

பதவிநிலை - வேலை பார்க்கும் பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஐ. **விவசாய உத்தியோகத்தர் (தொண்டர்)**

பதவிநிலை - பதில் உப துணைப்படைத் தலைவர் (பதில் உப லெப்டினன்ட்) (ஆண்)

தகைமைகள் - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விவசாயத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல்.
சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் பெற்றிருப்பது கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

வயது - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

ஒ. **ஆங்கில மொழி போதனாசிரியர் (தொண்டர்)**

பதவிநிலை - வேலை பார்க்கும் பதில் லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழி சம்பந்தமாக 03 வருட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி கற்பித்தலில் 03 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில மொழி கற்பித்தலில் டிப்ளோமா பெற்றிருத்தல். மற்றும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி கற்பித்தலில் 03 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

வயது - 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

**ஓ. கணக்கீட்டு உத்தியோகத்தர் (தொண்டர்)**

பதவிநிலை - துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

தகைமைகள் - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முகாமைத்துவப் பட்டமொன்றை அல்லது வணிகமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

வயது - 30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல்.

5. **ஏனைய தகைமைகள்**

இலங்கை நிரந்தர மற்றும் தொண்டர் கடற்படைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பின்வரும் பொது நிபந்தனைகளை விண்ணப்பதாரிகள் கட்டாயம் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ. தேசிய இனம் - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. வயது - விண்ணப்ப முடிவுத் திகதியில் பொருத்தமான பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய வயதினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. உயரம் - ஆண் - 66 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
- பெண் - 63 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

ஈ. நிறை - ஆண் - 52 கிலோகிராம்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.
- பெண் - 41 கிலோகிராம்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

உ. மார்பு - ஆண் - 32 அங்குலங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

ஊ. பார்வை நிறம் - எஸ்ரீஇ II (உரிய பார்வை)

எ. பார்வைத் திறன் - இடக் கண்ணில் 6/6 மற்றும் வலக் கண்ணில் 6/6 (மூக்குக்கண்ணாடி மற்றும் தொடர்பு வில்லைகள் இன்றி)

ஏ. சிவில் அந்தஸ்து - திருமணமானவர்/திருமணமாகாதவர்

6. விளையாட்டுத் துறையில் காட்டிய சிறந்த சாதனைகள் மீது முக்கிய கவனம் செலுத்தப்படும் என்பதுடன், ஏற்கனவே அரச/தனியார் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் மீது விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

7. மேலே 2 ஆம், 3 ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது உயரம், வயது, கண் பார்வை மற்றும் நிறை என்பன பரீட்சிக்கப்படும். வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட அளவுகளுக்கு அமைய உயரம், வயது, கண் பார்வை மற்றும் நிறை என்பன காணப்படாத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு முன்வைக்கப்பட மாட்டார்கள். எவரேனும் விண்ணப்பதாரியொருவரின் உயரம், வயது என்பன வேண்டப்பட்டவாறு இல்லாதிருப்பினும், அவ்விண்ணப்பதாரி கடற்படைச் சேவைக்குப் பயனுள்ள விசேட திறனொன்றை அல்லது தகுதியைக் கொண்டிருப்பாராயின், சேவைக்கான தேவையின் அடிப்படையில் கடற்படைத் தளபதியின் தற்றுணிபின் அடிப்படையில் அவ்விண்ணப்பதாரி கருத்திற்கொள்ளப்படுவார்.

8. **சேவை நிபந்தனைகள்**

அ. விண்ணப்பதாரிகள் இலங்கை நிரந்தர மற்றும் தொண்டர் கடற்படை ஆண்/ பெண் உத்தியோகத்தர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன், அவர்கள் அடிப்படை பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும். ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற அந்தந்த பிரிவின் அடிப்படையில் பயிற்சிப் பாடநெறிக் காலப்பகுதி வேறுபடும்.

ஆ. இலங்கை கடற்படை தளபதியின் தீர்மானத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் இலங்கையின் எப்பாகத்திலேனும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

இ. எல்லா உத்தியோகத்தர்களும் கடமை நிமித்தம் அல்லது பயிற்சிக்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகின் எந்தவொரு நாட்டிற்கும் இணைக்கப்படுவதற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலத்தின்போதும், அதன் பின்னரும் எல்லா ஆண்/பெண் உத்தியோகத்தர்களும் இலங்கை கடற்படைச் சட்டத்திற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

உ. பயிற்சிக் காலப்பகுதியில் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது அபேட்சகத்துவத்தை சுயவிருப்பின் பேரில் இடைநிறுத்திக்கொள்வதற்குத் தேவைப்படின், அவ் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை அரசாங்கத்தினால் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

ஊ. பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் ஆண்/பெண் உத்தியோகத்தரொருவரின் தவறான நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக்கூற வேண்டிய ஏதேனும் காரணி காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு அவர் தகைமையற்றவர் என அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டால், அவ் உத்தியோகத்தர் சார்பில் அதுவரை ஏற்க நேரிட்ட அனைத்துச் செலவுகளையும் அச்சந்தர்ப்பத்திலேயே இலங்கை அரசுக்குத் திருப்பிச் செலுத்துவதற்கு இணங்குவதாக, இலங்கை அரசின் பிரதிநிதி என்ற வகையில் இலங்கை கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கையொன்றிற்கும், பிணைமுறியொன்றிற்கும் கைச்சாத்திடுதல் வேண்டும்.

எ. பயிற்சிக் காலப்பகுதியில் ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை கடற்படை இல்லங்களிலிருந்து தங்குமிட வசதிகளும், உணவும் வழங்கப்படும்.

ஏ. வெற்றிடமாகவுள்ள திருமணமானவர்களுக்கான இல்லங்களை அடிப்படையாகக் கொண்டு திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்களுக்கு இல்லங்கள் வழங்கப்படும். இதற்கான இல்ல வாடகை அரச ஊழியர்களுக்கு ஏற்புடையவாறு அறவிடப்படும்.

9. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் மொழிக் கொள்கையை அமுல் செய்யும் பொருட்டு ஆக்கப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் ஆக்கப்படக்கூடிய ஒழுங்குவிதிகள் மற்றும் உறுப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

10. **சம்பளம் மற்றும் படிகள்.**- 2020.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள 03/2016 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

| விபரம் | கடற்படையிலுள்ள கீழ்நிலை உத்தியோகத்தர் (MIDSHIPMEN) (ரூ.) | பதில் உப துணைப்படைத் தலைவர் (பதில் உப லெப்டினன்ட்) (ரூ.) | உப துணைப்படைத் தலைவர் (உப லெப்டினன்ட்) (ரூ.) | துணைப்படைத் தலைவர் (லெப்டினன்ட்) (ரூ.) | துணைப்படைத் தளபதி (லெப்டினன்ட் கொமாண்டர்) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 32,750.00 | 41,905.00 | 47,615.00 | 55,625.00 | 60,965.00 |
| வாழ்க்கைச் செலவுப் படி | 7,800.00 | 7,800.00 | 7,800.00 | 7,800.00 | 7,800.00 |
| சீருடைப் படி | 525.00 | 525.00 | 525.00 | 525.00 | 525.00 |
| கடின சேவைப் படி | - | 600.00 | 600.00 | 600.00 | 600.00 |
| மேலதிக படி | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| விசேட சீராக்கல் படி | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 3,000.00 |
| இடைக்கால கொடுப்பனவு - 2022 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 |
| உணவு கொடுப்பனவு | 34,846.80 | 34,846.80 | 34,846.80 | 34,846.80 | 34,846.80 |
| **மொத்தம்** | **84,921.80** | **94,676.80** | **100,386.80** | **108,396.80** | **113,736.80** |

அ. உணவுக் கொடுப்பனவு உணவைப் பெறாத உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும்.

ஆ. தகைமைச் சம்பளம், ஏற்புடையவிடத்து, மாதாந்தம் ஆகக் கூடியது ரூ. 637.50 செலுத்தப்படும்.

இ. வருடமொன்றிற்கு மூன்று சோடி விடுமுறைப் புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் ஏற்புடையவிடத்து தங்கிவாழ்வோர் ஆகியோருக்காக).

ஈ. முகாமில் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாதத்தில் ஒரு தடவை வீட்டிற்கு செல்வதற்கும், சென்று வருவதற்கும் ஒரு சோடி கடமை நிமித்தமான புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கப்படும் அல்லது பேரூந்துக் கட்டணம் செலுத்தப்படும்.

உ. சீருடை மற்றும் அதனுடன் இணைந்த துணைப்பொருட்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஊ. மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும். (உத்தியோகத்தர், வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் மற்றும் ஏற்புடையதாயின் தங்கிவாழ்வோர் ஆகியோருக்காக).

எ. அரசாங்க திருமணமானவர்களுக்கான இல்லமொன்றில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளாத திருமணமான ஆண்/பெண் உத்தியோகத்தர்கள் ரூ. 3,200.00 தொடக்கம் ரூ. 7,700.00 வரையான வீட்டு வாடகைப் படிக்கு உரித்துடையவர்களாவர்.

11. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.-**

அ. விண்ணப்பங்கள் கீழ்க் காட்டப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் விபரங்கள் தெளிவாகப் பூர்த்திசெய்யப்படுதலும் வேண்டும். முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை, 2024, பெப்புருவரி 05 ஆந் திகதி நண்பகல் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் (ஆட்சேர்ப்பு), இலங்கை கடற்படை தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "நேரடி நுழைவு 2023/ 02- நிரந்தர/ தொண்டர் ஆண்/பெண் உத்தியோகத்தர்கள்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் அதே வகையில் நிகழ்நிலை முறைமை (Online) ஊடாகவும் விண்ணப்பிக்கப்படல் வேண்டும். மேற்சொன்ன இரு வழிகளிலும் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள், பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத விண்ணப்பங்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு www.navy.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும் அல்லது 011-7195118 / 011-7195120 /011-7195154 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. அரசாங்க சேவையிலுள்ள (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் விடுவிக்கப்படுவார் எனும் அத்தாட்சிப்படுத்தல் சகிதம் நிறுவனத்தலைவர் ஊடாக (திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், சிவில் நிறுவனங்கள்) சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரிகள், நேர்முகப்பரீட்சையின்போது அல்லது வேறேதேனும் சந்தர்ப்பத்தில் கீழ்க் காட்டப்பட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்களை அனுப்பும்போது அவ் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகளை இணைத்து அனுப்புதலும் வேண்டும்.

(1) பிறப்புப் பதிவுச்சான்றிதழ்.

(2) விண்ணப்பித்த பிரிவிற்காக தேவைப்படுத்தப்பட்ட கல்வி/ உயர்கல்வி/ தொழிற்கல்வி/ பட்டத்தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

(3) பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட பாடசாலை விடுகைப்பத்திரம் மற்றும் குணநலச்சான்றிதழ்.

(4) ஆறு மாத காலத்திற்குள் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ்.

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொண்ட தொழில்/ தொழில்நுட்ப அனுபவச் சான்றிதழ் (ஏதாவது இருப்பின்).

(6) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு குணநலச்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்து வைத்திருக்கும் பொறுப்புவாய்ந்த நபரொருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிடமிருந்து).

(7) விளையாட்டுத்துறைசார் செயற்பாடுகள் மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

ஈ. கோரப்படும்போது மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

உ. வேறு ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் மூலப்பிரதிகளோ விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் ஆகாது.

ஊ. விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை அனுப்பிவைத்து அவை காணாமல் போகுமாயின், இலங்கை கடற்படை பொறுப்பேற்காது.

12. விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள ஏதேனும் கூற்று பொய்யானதென கண்டறியப்பட்டால், அப் பொய்யான கூற்று தெரிவிற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தகைமையிழப்பிற்கு ஆளாவார். தெரிவின் பின் தெரியவரும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரி தண்டனையுடன் பதவி நீக்கத்திற்கு ஆளாவார்.

**13. தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள்**

அ. மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படையால் நடாத்தப்படும் ஆரம்ப மருத்துவ பரிசோதனையில் சித்தியெய்துதல் வேண்டும். அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மட்டும் கீழ்க் காட்டப்பட்ட உடற் தகைமை பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

ஆ. உடற் தகைமை பரிசோதனையில் சித்தியெய்துவதற்கான தேவைப்பாடுகள்

| பால்நிலை | மேல் தள்ளல் (Push ups) (2 நிமிடங்களுக்குள்) | சுழல் தள்ளல் (curl ups) (2 நிமிடங்களுக்குள்) | 1600 மீட்டர் ஓட்டம் (நிமிடங்கள்) |
|---|---|---|---|
| ஆண் | 27 | 25 | 11 |
| பெண் | 11 | 19 | 12 |

இ. உடற் தகைமை பரிசோதனையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகள் மட்டும் இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இரண்டாவது நேர்முகப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படை வைத்தியசாலை மூலம் நடாத்தப்படுகின்ற முழுமையான மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். முழுமையான மருத்துவ பரிசோதனையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகள் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். உரிய பிரிவுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மட்டும் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய தெரிவுசெய்யப்படுவர்.

ஈ. ஆட்சேர்ப்பிற்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரிகளுக்கு அது பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

உ. நேர்முகப்பரீட்சைக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு, நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பற்றி வட்ஸ்அப் செயலி (WhatsApp) ஊடாக மட்டுமே அறிவிக்கப்படும் என்பதுடன், எழுத்துமூலமான தகவல்கள் எதுவும் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவது தொடர்பாக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு படிகளோ செலுத்தப்படமாட்டாது.

ஊ. இறுதி நேர்முகப் பரீட்சையில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகள் இலங்கை கடற்படை மருத்துவ சபை முன் சமுகமளித்தல் வேண்டும்.

எ. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தனது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏ. விண்ணப்பதாரியொருவரை பரிந்துரை செய்ய விரும்பும் எவரும் அவருக்கு நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியொருவரைத் தெரிவுசெய்வதில் எந்தவொரு வடிவிலான வலியுறுத்தல் அல்லது செல்வாக்கு செலுத்த முயற்சித்தல் என்பவை அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையிழக்கச் செய்யும்.

ஐ. விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கல்வி மற்றும் தொழிற்தகைமை சான்றிதழ்களின் செல்லுபடித்தன்மை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் உறுதிசெய்யப்படும்.

ஒ. எல்லா விண்ணப்பதாரிகளினதும் பாதுகாப்பு இசைவு அறிக்கைகள் (Reports on security clearance) கடற்படைத் தலைமையகத்தினால் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

**குறிப்பு**: இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.

யூவீஎம்பி பெரேரா, ஆர்எஸ்பீ, யூஎஸ்பி, என்டீயூ, பிஎஸ்சீ,
வைஸ் அட்மிரால்,
இலங்கை கடற்படைத் தளபதி.

இலங்கை கடற்படைத் தலைமையகம்,
த.பெ. எண் 593,
கொழும்பு 01.

**இலங்கை கடற்படை - நிரந்தர/தொண்டர் கடற்படையில் ஆண்/பெண் நேரடி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. தேசிய இனம் :........................................................................................................
(பரம்பரை மூலமா அல்லது பதிவின் மூலமா இலங்கைப் பிரசை என்பதைக் குறிப்பிடவும். பதிவின் மூலமாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்)
2. விண்ணப்பிக்கும் பிரிவு/பதவி :........................................................................................
3. முழுப்பெயர் (தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு) :......................................................
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :...................................................................................
5. நிரந்தர முகவரி :...........................................................................................................
6. தபால் முகவரி :.............................................................................................................
7. மின்னஞ்சல் முகவரி :......................................................................................................
8. பிறந்த திகதி :...............................................................................................................
9. வயது: வருடங்கள் :.............................. மாதங்கள் : ......................... நாட்கள் :..................... (2023............ ஆம் திகதிக்கு)
10. உயரம் :............... (அங்குலம்) மார்பு: .............................. (அங்குலம்) நிறை :................. (கிலோகிராம்)
11. நிரந்தர வதிவிடத்திற்கு உரிய பொலிஸ்நிலையம் :................................................................
12. மாவட்டம் :..................................................................................................................
13. தேர்தல் தொகுதி :..........................................................................................................
14. கிராம அலுவலர் பிரிவு :..................................................................................................
15. தொலைபேசி இலக்கம் (WhatsApp) :...................................................................................
16. சிவில் அந்தஸ்து :..........................................................................................................
17. பால்நிலை :..................................................................................................................
18. கல்விகற்ற பாடசாலைகள் :...............................................................................................
19. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலையின்/ பல்கலைக்கழகத்தின் பெயர் | சித்தியெய்திய பரீட்சை | பரீட்சைக்குத் தோற்றிய வருடம் | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உள்ளடங்கலாக) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>ஏனைய | | |

20. பாடசாலை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய பின்னர் செய்த தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்):

| தொழில்தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள்:

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

22. பதவிக்கான ஏதேனும் விசேட தகைமைகள் :.........................................................................................................................

23. விளையாட்டுகளில் படைத்த சாதனைகள் பற்றிய விபரங்கள் (பங்குபற்றிய போட்டிகள் மற்றும் விளையாட்டுக் குழுக்கள், திகதி மற்றும் படைத்த சாதனைகளுடன் தருக)

24. பாடசாலையில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிவாரியான நிறுவனங்களில் காட்டிய பிற சாதனைகள் (திகதி, ஆண்டு முதலியவற்றுடன் விபரங்களைத் தரவும்) :...................................................................................

25. ஆயுதப்படை, தொண்டர்படை, பயிலிளவல் படை அல்லது ஆண் சாரணர் அமைப்பில் ஆற்றிய ஏதேனும் முன்னரான சேவை :...............................................................................

26. இலங்கை கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படைச் சேவைகளில் அல்லது பொலிஸ் படையில் இணைவதற்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ளீர்களா? அவ்வாறெனின், அவை பற்றிய விபரங்களையும் பெறுபேறுகளையும் குறிப்பிடவும் :.................................................................................................................................................................

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்ட தண்டனைத் தீர்ப்பொன்றைப் பெற்றுள்ளீரா? அவ்வாறெனின், விபரங்களைத் தரவும் :...........................................................................

28. அரச திணைக்களமொன்றில், சபையொன்றில், கூட்டுத்தாபனமொன்றில், பகிரங்கச்சேவை தாபனமொன்றில் (மத்திய வங்கி/அரச வங்கிகள்/பல்கலைக்கழகங்கள்/சிவில் அமைப்புக்கள்/ அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனிகள் அடங்கலாக) நீங்கள் சேவையாற்றியுள்ளீரா? அவ்வாறெனின், தொழில் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் விபரங்களையும் குறிப்பிடுக :.......................................................................................................................................

29. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்:

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

30. விண்ணப்பதாரியினால் கைச்சாத்திடப்பட வேண்டிய வெளிப்படுத்தல்:

மேலே என்னால் கூறப்பட்ட விடயங்கள் உண்மையானவையும் சரியானவையும் என எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில் வெளிப்படுத்துகின்றேன். இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கடற்படையில் உள்ள அதிகார ஆணைக்குழுவிற்காக தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக கடைபிடிக்கப்படும் நடவடிக்கைமுறையையும் பிரயோகிக்கப்படும் ஒழுங்குவிதிகளையும் நான் நன்கு வாசித்து புரிந்துகொண்டேன்.

.................... ......................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

12-738

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

நில அளவைத் திணைக்களம்

## இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பயிலுநர் தரத்திற்கு) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

1.0 நில அளவைத் திணைக்களத்தில், வெற்றிடங்கள் நிலவும் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் 39 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்காக நடத்தப்படும் வரையறுத்த போட்டிப் பரீட்சைக்காகத் தகுதிபெற்றுள்ள திணைக்கள ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 **பதவிப் பெயர்** : வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பயிலுநர் தரம்)

1.2 **பதவிக்குரிய கடமையின் தன்மை**:
குறிக்கோள் வரைபடங்கள், பிரதேசவியல் வரைபடங்கள் மற்றும் பிற வரைபடங்களில் தரவு செயலாக்கம், தரவுத் தளங்களில் தரவு உள்ளீடு, தரவுத்தள உதவியுடன் படத் தயாரிப்பு, மதிப்பாய்வு, தரக் கட்டுப்பாடு, விற்பனை மற்றும் வரைபடத் தயாரிப்பு தொடர்பான பிற தொழில்நுட்ப நடவடிக்கைகள், ஆய்வுகள் பற்றிய அலுவலக பூர்வாங்க மற்றும் இறுதிப் பணிகள், பொதுமக்களுக்கு புலப்பட நகல்களை வழங்குதல், அவற்றுடன் தொடர்புடைய ஆவணங்களை பராமரித்தல், முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் நில அளவைத் தரவுத்தள செயல்பாட்டு விடயங்கள்.

2.0 **சம்பளம்** :

| தரம் | சம்பள அளவுத்திட்டம் |
|---|---|
| பயிலுநர் தரம் | முதலாம் வருட மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 27,140.00<br>இரண்டாம் வருட மாதாந்தக் கொடுப்பனவு ரூபா 27,140.00<br>(பொ. நி. சு. 03/2016 இன் அட்டவணை V இற்கமைவானது) |
| தரம் III | மாதாந்தம் ரூபா 31,040-10×445- 11×660-10×730-10×750- ரூபா 57,550 (MN3-2016) |
| தரம் II | மாதாந்தம் ரூபா 31,040-10×445-11×660-10×730 - 10×750 - ரூபா 57,550<br>(12 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பிக்கும்) (MN3-2016) |
| தரம் I | மாதாந்தம் ரூபா 31,040-10×445-11×660-10×730 - 10×750 - ரூபா 57,550<br>(23 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பிக்கும்) (MN3-2016) |
| விஷேட தரம் | மாதாந்தம் ரூபா 41,580-11×755-18×1,030-ரூபா 68,425 (MN 7-2016) |

3.0 **பதவிக்குரிய சேவை நிபந்தனைகள்**:

3.1 பயிற்சி பெறும் தரத்துக்கென ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் தியதலாவை அளவை மற்றும் வரைபடக்கலை நிறுவனத்தின் மூலம் குறித்த பதவிக்கென நடத்தப்படும் இருவருட கோட்பாடு மற்றும் செயன்முறைப் பயிற்சியுடனான டிப்ளோமா பாடநெறியில் சித்தி பெற்றதன் பின்னர் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் தரத்தில் நியமிக்கப்படுவர்.

3.2 இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் நிரந்தரமானவை, ஓய்வூதிய உரித்துடையவை. ஓய்வூதியம் தொடர்பில் அரசு எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டவை. அரசு காலத்துக்கு காலம் விதிக்கும் நியமனங்களுக்கமைய அதற்கான நிதிப் பங்களிப்பை வழங்குதல் வேண்டும். 3.3 இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் நியமனம் 03 வருடதகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும்.

3.3 வரைபடக்கலை தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கெனத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்ற ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

3.4 தெரிவு செய்யப்படுவோர் இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் காணப்படும் அரச சேவையில் நியமனம் தொடர்பிலான பொது நிபந்தனைகளுக்கும், தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் இலங்கை தொழில்நுட்ப சேவையின் சட்ட விதிகள் மற்றும் அவற்றில் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், அரச சேவைகள் ஆணைக்குழுவின் கடமைக்கான விதிகள், அரசு வெளியிடும் அரச சேவைகளுடனான ஏனைய நியமங்களுக்கும் உட்படுதல் வேண்டும்.

3.5 அரச கரும மொழியல்லாத மொழி மூலத்தில் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் குறித்த மொழிப் புலமையைத் தகுதிகாண் காலத்துக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.6 பொது நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/ 2020 இன் ஏற்பாடுகளுக்கமைய ஏனைய அரச கரும மொழிப் புலமையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.7 தரம் III இல் 05 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர், இணைந்த மொழியான ஆங்கில மொழியில் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைச் சித்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.8 இரண்டு வருட கால பயிற்சியினை முழுமையாக பூர்த்தி செய்வதாகவும், இரண்டு வருட கால பயிற்சியின் பின்னர் 06 வருடங்கள் திணைக்களத்தில் பணி புரிவதாகவும், நில அளவையாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட வேண்டியதுடன், அவன்/ அவள் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட தினத்தின் பின்னர் பயிற்சியினை விட்டு விலகிச் சென்றாலோ அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட காலப்பகுதியில் திணைக்களத்தில் பணிபுரியத் தவறினாலோ பயிற்சிக்காக அரசு செலவிடும் ரூபா 1,50,000 தொகையினை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு செலுத்துவதாக, திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் பிணையாளர்கள் இருவரினூடாக உறுதிப்படுத்தல் உடனான பிணைமுறி ஒன்றினை பயிற்சியினை ஆரம்பிக்கும் முன்னர் எழுதி கையொப்பம் இடல் வேண்டும்.

4.0 **தகைமைகள் :**

4.1 **கல்வித் தகைமைகள்:**

இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் ஆகிய இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞான/ கணித/ தொழில்நுட்பவியல் பாடத்துறைக்கு உரிய மூன்று பாடங்களில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல்,

மற்றும்

சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

4.2 **உடலியல் தகைமைகள் :**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.3 **ஏனையவை :**

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்;

(iii) ஏதேனும் ஒரு சமயப் பிரிவின் மதகுரு ஒருவராக தலைமைத்துவத்தை வகிக்கும் எந்த ஒருவரும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமை பெறமாட்டார்;

(iv) விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள தினத்தன்று உத்தியோகத்தர் சகல தகைமைகளையும், மற்றும் உரிய வயதெல்லையினையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

5.0 **வயது:**

5.1 **ஆகக் குறைந்த வயதெல்லை :** 18 வருடங்களுக்குக் குறையாத

5.2 **ஆகக்கூடிய வயதெல்லை :** 30 வருடங்களைக் கடந்திராத

6.0 **பயிலுநர் தரத்திற்கு இணைத்துக்கொள்ளும் முறை.-**

நில அளவையாளர் நாயகம் அவர்களினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சை ஒன்றினதும் மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கு முறைக்கு ஏற்ப இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை ஒன்றினை பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

6.1 **எழுத்துமூலப் பரீட்சை.-** பரீட்சை இரண்டு பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சை ஒன்றாகும். மேற்படி பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் கோரப்படும் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| பாடங்கள் | பெற்றுக்கொள்ளக் கூடிய மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த புள்ளிகளின் சதவீதம் | நேரம் |
|---|---|---|---|
| பொது விவேகம் | 100 | 40% | 01 மணித்தியாலம் |
| தொழில்நுட்ப வினாத்தாள் | 100 | 40% | 02 மணித்தியாலம் |

6.1.1 **பாடத்திட்டம்** :

I. பொது விவேகப் பரீட்சை.-
விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான சிந்தனைத்திறன், அவரது சிந்திக்கும் பகுப்பாய்வு நிலைமை மற்றும் தீர்மானிக்கும் ஆற்றல் என்பவற்றினைத் தீர்மானிப்பதற்கான கேள்விகளை உள்ளடக்கியது.

II. விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை :

**கணிதம் :**
- இயற்கணிதம் (சமத்துவமின்மைகள், மாறிகள், தொடர்கள், மடக்கைகள்)
- திரிகோண கணிதம் (சமன்பாடுகள், முக்கோண அளவைகளைத் தீர்த்தல்)
- புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியம விலகல், நிகழ்தகவு)

**பௌதீக விஞ்ஞானம் :**
- ஒளி மற்றும் ஒளியியல் (பிரதிபலிப்பு மற்றும் ஒளிவிலகல், கண்ணாடிகள், வளைந்த மேற்பரப்பு, ப்ரிஸம், லென்ஸ், வானியல் சூத்திரங்கள், நுண்ணோக்கி மற்றும் தொலைநோக்கி)
- நியூட்டனின் இயக்கவியல் (ஸ்கேலர் மற்றும் வெக்டார், நியூட்டனின் இயக்க விதி, இயக்கவியல்)

**பல்வேறு தலைப்புக்கள் :**
புவியியல் அறிமுகம் (புவியின் வடிவம், புவியியல் பண்புகள் ஆகியன) திண்மப் பொருட்களின் கோணப் பார்வை மற்றும் ஒளிப்படங்களை பகுதிகளாக வேறாக்கல்.

6.2 **பொதுவான நேர்முகப் பரீட்சை.-** தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

7.0 **பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் தரம் III இற்கு இணைத்துக்கொள்ளப்படல் :**

1. பயிலுநர் தரத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தியதலாவை நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் இரண்டு வருட கால, தொழில்நுட்பக் கலை டிப்ளோமாப் பாடநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் மேற்படி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்ததாக வழங்கப்படும் சான்றிதழினை சமர்ப்பிப்பதன் ஊடாக தரம் III இற்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

2. பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களுக்கு ஆகக்கூடியது 06 மாத காலமளவு தமது பயிற்சிக் காலத்தினை நீடித்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் பதவி முடிவுறுத்தப்படும்.

8.0 **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் பூர்த்தி செய்தல்.-**

8.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 21 செ. மீ. × 29 செ. மீ. (ஏ 4) அளவிலான தாளின் இரு பக்கங்களிலும் அமையும் வண்ணம் சுயமாகத் தயாரிக்கப்பட வேண்டும். தாளின் முதல் பக்கத்தில் 01 முதல் 4.3 வரையிலான தலைப்புகளையும், மறுபக்கத்தில், இல. 05 முதல் 11.3 தலைப்பு வரையும் இல. 12 முதல் 14 வரை 03 ஆம் பக்கத்திலும் அமைக்கப்படுதல் வேண்டும்.

8.2 தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பத்தினைத் தயாரிக்க வேண்டியதுடன் மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனால் சரியான முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

8.3 சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை மேற்படி மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

8.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுனம் ஒன்றின் ஊடாக பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவராயின் தனது கையொப்பத்தினை திணைக்களத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மூலமாகவோ, அவ்வாறின்றிய விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்தியப்பிரமாணம் செய்த ஆணையாளர் ஒருவரினால், பிரபல நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால், அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் சேவை பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால், அல்லது அரசாங்க நிருவாக சுற்று நிருப இலக்கம் 06/ 2006 இன் தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்திலுள்ள அரச சேவையில் நிரந்தர பதவி ஒன்றினை வகிக்கும் அலுவலர் ஒருவரினாலோ உறுதிப்படுத்தல் வேண்டும்.

**குறிப்பு** : பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கோரிய பரீட்சை நிலையத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.0 **விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.-**

9.1 உரிய மாதிரிப்படிவத்தினை ஒத்திராத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி இல்லாத மற்றும் சரியாகப் பூர்த்தி செய்யாத குறைபாடுகளைக் கொண்டு காணப்படும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

9.2 விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

9.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நில அளவையாளர் நாயகம் அவர்களினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்ளவதாகவோ கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லாமை தொடர்பாக அறிய வருமாயின் அவர்களின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும்.

10.0 **பரீட்சைக் கட்டணங்கள்**.-பரீட்சைக் கட்டணம் ரூபா 800.00 ஆகும். மேற்படி தொகையினை கொழும்பு 05, கிருல வீதி, இல. 150 என்ற இடத்தில் அமைந்துள்ள நில அளவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு அல்லது எந்தவொரு மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கும் அல்லது நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம்-தியதலாவ இற்குச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றினை தொடர்ந்து வரும் தேவைகளுக்காக தம்வசம் வைத்துக்கொள்ளல் வேண்டும்.) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டுக்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11.0 **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**:-

11.1 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2024.01.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்,
பரீட்சைகள் பிரிவு,
நில அளவைகள் திணைக்களம்,
இல. 150, நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

11.2 தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டு உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை தனது திணைக்களத் தலைவர் ஊடாகவும் அரசாங்க கூட்டுத் தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரிபவர்கள் தனது நிறுவனத் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

11.3 விண்ணப்பம் அனுப்பப்படும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுநர் தரத்திற்கு பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு**.- 2024.01.29 ஆந் திகதியின் பின்னர் நில அளவைகள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்தின் அடிப்படையிலும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

12.0 **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் ஒருவர் தகைமை அற்றவரெனத் தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுவதற்கு இடையில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையினை இரத்துச் செய்வதற்கு வாய்ப்புண்டு. சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஓர் தகவல் அது பொய்யானது என அறிந்தும் சமர்ப்பித்து உள்ளமை தொடர்பாகவோ அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தினை வேண்டுமென்றே மறைத்துள்ளமை தொடர்பாகவோ அறியவருமாயின் அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

13.0 **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. மேலும் பரீட்சார்த்தி தனக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

14.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். இதற்காக கீழே குறிப்பிடப்பட்டு உள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

15.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் ஓர் விடயம் இருப்பின், அது தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்கள் தீர்மானத்தினை மேற்கொள்வார். சகல விண்ணப்பதாரிகளும் மேற்படி வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சைச் சட்டவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள கட்டுப்பட்டு உள்ளனர்.

டபிள்யூ. சுதத் எல். சீ. பெரேரா,
நில அளவையாளர் நாயகம்,
நில அளவைத் திணைக்களம்.

நில அளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2023.12.14.

**அட்டவணை - 01**

பரீட்சை நடைபெறும் நிலையங்கள் மற்றும் நிலைய இலக்கங்கள்

| தொடரிலக்கம் | நிலையம் | நிலைய இலங்கங்கள் |
|---|---|---|
| 01 | கொழும்பு | 01 |
| 02 | தியதலாவ | 02 |
| 03 | அநுராதபுரம் | 03 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**

நில அளவைத் திணைக்களம்

**இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக (பயிலுநர் தரத்திற்கு) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023**

Open Competitive Examination for recruitment to the Post of Map Technological Officer (Training Grade) in Sri Lanka Technological Service - 2023

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

1.0 பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையம் : [ ]

2.0 பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் (சிங்களம் - S தமிழ் - T ஆங்கிலம் - E)
(உரிய எழுத்தினை கூட்டினுள் எழுதவும்) [ ]

3.0 முதல் எழுத்துக்களை பின்னால் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (உதாரணம் : PERERA, A. B. C.)
..................................................................................................................................

3.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..........................................................................

..................................................................................................................................

3.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................

..................................................................................................................................

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.4 பிறந்த திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.5 2024.01.22 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

3.6 பால் (பெண்/ஆண்) : ☐ (பெண் - F ஆண் - M)
(உரிய எழுத்தினை கூட்டினுள் எழுதவும்)

3.7 திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது : திருமணமானவர் : ☐
திருமணமாகாதவர்: ☐
(உரிய கூட்டினுள் ✓அடையாளம் இடுக.)

4.0 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :.......................................................................................
.......................................................................................

4.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : .......................................................................................
.......................................................................................

4.2 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : .......................................................
.......................................................................................

4.3 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :.......................................................................................

5.0 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :.......................................................................................

5.1 பிரதேச செயலாளர் பிரிவு :.......................................................................................

5.2 கிராம அலுவலர் பிரிவு :.......................................................................................

6.0 கல்வித் தகைமைகள் : (உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :

6.1 க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :..................................................................
(ii) பரீட்சைச் சுட்டெண் :..................................................................
(iii) பெறுபேறு :..................................................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

6.2 க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை தொடர்பான விபரங்கள் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :----.
(ii) பரீட்சைச் சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

7.0 தொழில்சார்/ தொழில்நுட்பவியல் தகைமைகள் : (உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்):

7.1 கற்றுள்ள பட்டம்/பாடநெறி :.................................................................................................

7.2 பட்டம்/பாடநெறியினைப் பயின்ற நிறுவனத்தின் பெயர் :..........................................................

7.3 பட்டம்/பாடநெறியின் காலப்பகுதி :..........................................................................................

8.0 ஏனைய தகைமைகள் :

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

9.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டு உள்ளீரா? (உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக.)

ஆம் : ☐ இல்லை: ☐

9.1 "ஆம்" எனின், விபரங்களைக் குறிப்பிடுக :----.

10.0 விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் தொழில் ஒன்றில் ஈடுபட்டு விலகி இருக்கும் ஒருவராயின் அவ்வாறு விலகுவதற்கான காரணம் :..................................................................................

.......................................................................................................................................................

11.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :

11.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :...................................................................

11.2 பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :......................................................................................

11.3 செலுத்தப்பட்ட தொகை : ரூபா ...................................................................................................

| பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கே ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை தம் வசம் வைத்துக் கொள்ளவும்) |
|---|

12.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

- இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிமொழிகின்றேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியினை பூர்த்தி செய்யாமல் இருப்பதனால் மற்றும்/ அல்லது பிழையாகப் பூர்த்தி செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டத்தினை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும், இங்கு சகல பகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாகவும் உறுதிமொழிகின்றேன்.

- என்னால் மேற்கொள்ளப்பட்ட மேற்படி உறுதிமொழி பொய்யானது என்பது நிருபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னர் பொருத்தமற்றவர் எனவும் நியமனம் பெற்றதன் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படவும் கட்டுப்பட்டு உள்ளதனை நான் அறிவேன்.

- மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக நில அளவையாளர் நாயகம் அவர்களினால் விதிக்கப்படும் சட்ட விதிகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதனை உறுதிமொழிகின்றேன்.

- இங்கு குறிப்பிடப்பட்டு உள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன் எனவும் உறுதிமொழிகின்றேன்.

.................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :.........................

*13.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :*

இந்த விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் .................................. திரு. / திருமதி/ செல்வி அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதனையும், அவர் ......................................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும், நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :...............

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :..................................................................................

பதவி :.............................................................................................................................

முகவரி :.........................................................................................................................

(உத்தியோகபூர்வ முத்திரையினையிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.)

*14.0 தற்போது அரச அல்லது பகுதியளவு அரச நிறுவனங்களில் பணி புரியும் அலுவலர்களுக்காக மாத்திரம் ஏற்புடையதாகும்.*

***திணைக்கள/நிறுவனத் தலைவரின் பரிந்துரை :***

மேற்படி விண்ணபத்தினைச் சமர்ப்பித்துள்ள திரு./ திருமதி/ செல்வி ...................................................... அவர்கள் ................ ................................................ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .......................... ஆந் திகதி முதல் ............... ஆந் திகதி வரை ................. ஆக பணிபுரிவதுடன், அவருக்கு எதிராக பூர்த்தி செய்யப்படாத ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டுக்கள் அறிக்கையிடப்பட்டு உள்ளது/இல்லை. அவரின் வேலை நடத்தை மற்றும் வருகை திருப்திகரமானது/திருப்திகரமற்றது. உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உள்ளதாகவும், மேற்படி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டு உள்ளது எனவும், அவர் மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் மேற்படி திணைக்களத்தில் இருந்து/ நிறுவனத்தில் இருந்து இந்த அலுவலரினை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

................................
திணைக்களத்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :....................

*12-661*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.